பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை
07 03 2025 **FRIDAY** 7 15 **PM**
வணக்கம், ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. **Dadra, Nagar Haveli, Diu, Daman** பகுதிகளை உலக பாரம்பரியமிக்க சுற்றுலா தலங்களாக மேம்படுத்துவதற்கான முயற்சிகளை மத்திய அரசு எடுத்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்..

2. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை மேம்படுத்த தொழில்துறையினரும், கல்வித்துறையினரும் இணைந்து செயல்பட வேண்டும் என்று மத்திய அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. ரயில் நிலையங்களில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்த புதிய நடைமுறைகளை ரயில்வே அமைச்சகம் அறிவித்துள்ளது.

4. பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் சாமானிய மக்களின் மருந்து செலவை கணிசமாக குறைத்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

5. **Prague** செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

**>>>>><<<<<**

**Dadra, Nagar Haveli, Diu, Daman** யூனியன் பிரதேசத்தை மாதிரி மண்டலமாக கொண்டு வருவதற்கான முயற்சிகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**Dadara Nagar Haveli-**யின் **Silvassa-**வில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பேசிய அவர், உள்ளார்ந்த வளர்ச்சியை இந்த யூனியன் பிரதேசத்தில் உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை பல ஆண்டுகளாக எடுத்து வருவதாக தெரிவித்தார்.

உலக பாரம்பரிய சுற்றுலா தலமாக இப்பகுதியை மாற்றும் வகையில் உலக தரத்திலான கட்டமைப்பு, போக்குவரத்து வசதி, சுகாதாரம், கல்வி, சுற்றுலா கட்டமைப்பு ஆகியவற்றை மேம்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

யூனியன் பிரதேச நிர்வாகமும் மக்களுக்கான பல சமூக பாதுகாப்பு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

ரயில் போக்குவரத்து மற்றும் சாலை கட்டமைப்புகளை விரிவாக்கம் செய்வதன் மூலம் இப்பகுதியில் சுற்றுலாத்துறைக்கு உத்வேகம் அளிக்க முடியும் என்றும் பிரதமர் கூறினார்.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பல சுற்றுலா மேம்பாட்டு திட்டங்களையும் அவர் பட்டியலிட்டார்.

நாட்டிலேயே பிரசித்தி பெற்ற ஒரு சுற்றுலா தலமாக **Dadra, Nagar Haveli, Diu, Daman** யூனியன் பிரதேசம் விரைவில் உருவெடுக்கும் என்று திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

கடந்த பத்தாண்டுகளாக தொழில் மையமாக இப்பகுதியை மேம்படுத்தும் வகையில் புதிய தொழிற்சாலைகளை தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக அவர் கூறினார்.

தொழில் வளர்ச்சியின் மூலம் யூனியன் பிரதேசத்தில் உள்ள பழங்குடியின மக்களுக்கு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

**Silvassa-**வில் 460 கோடி ரூபாய் மதிப்பில் 450 படுக்கை வசதிகள் கொண்ட நமோ மருத்துவமனையின் ஒரு பகுதியை அவர் இன்று தொடங்கி வைத்தார்.

சாலை போக்குவரத்து, பள்ளிகள், சுகாதார மையங்கள், பஞ்சாயத்து மற்றும் நிர்வாக கட்டிடங்கள், அங்கன்வாடி மையங்கள், குடிநீர் திட்டங்கள் போன்றவற்றையும் திரு. நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.

**>>>>><<<<<**

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தில் இயங்கும் தொழிற்சாலைகள் கொண்ட புதிய தலைமுறையை உருவாக்கும் முயற்சியை தொழில்துறையினரும், உயர்கல்வித்துறையினரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் தொடர்பான கருத்தரங்கில் பேசிய அவர், நாட்டில் உள்ள 240 பல்கலைக் கழகங்களில் செயற்கை நுண்ணறிவு மற்றும் செமிகண்டக்டர் தொழில்நுட்பத்தை கற்றுத் தருவதற்கான கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வளர்ந்து வரும் தொழில்நுட்ப தேவைகளுக்கு ஏற்ப கல்வித்துறையினர் செயல்திறன்மிக்க மாணவர்களை உருவாக்கித் தர வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

தொழில்நுட்ப ரீதியாக வளர்ந்துள்ள 5 நாடுகளில் ஒன்றாக இந்தியாவை கொண்டு வருவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக் கொண்டார்.

உற்பத்திக்கான இந்தியா திட்டத்தின்கீழ, 5 பெரிய செமிகண்டக்டர் தொழிற்சாலைகள் கட்டப்பட்டு வருவதாக தெரிவித்த அவர், இந்த ஆண்டிற்குள், இதில் ஒரு தொழிற்சாலை தனது உற்பத்தியை தொடங்கும் என்று திரு. அஸ்வினி வைஷ்ணவ் கூறினார்.

**>>>>><<<<<**

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக வரும் 11ஆம் தேதி மொரீசியஸ் செல்கிறார்.

பிரதமர் பயணத்திட்டம் குறித்து புதுதில்லியில் செய்தியாளர்களிடம் தெரிவித்த வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், 12ஆம் தேதி கொண்டாடப்படவுள்ள மொரீசியஸ் நாட்டின் தேசிய தின விழாவில் பிரதமர் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்ளவிருப்பதாகவும் தெரிவித்தார்.

இந்த விழாவில் இந்திய ராணுவ படைப்பிரிவினரும் பங்கேற்கவுள்ளதாக அவர் கூறினார்.

மொரீசியஸ் நாட்டின் அதிபர், பிரதமர் மற்றும் முக்கிய தலைவர்களை பிரதமர் திரு. நரேந்திர மோடி இந்த பயணத்தின் போது சந்திக்கவுள்ளதாகவும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

சட்டவிரோத பணப்பரிவர்த்தனை வழக்கில் **WTC** குழுமத்தின் **Ashish Bhalla-**வை அமலாக்கத்துறையினர் இன்று கைது செய்தனர்.

பல்வேறு முதலீட்டாளர்களின் பணத்தை மோசடி செய்தது, ரியல் எஸ்டேட் முறைகேடு உள்ளிட்ட பல்வேறு குற்றச் செயல்களை திட்டமிட்டு அவர் நடத்தியிருப்பதாகவும் அமலாக்கத்துறையினர் தெரிவித்தனர்.

தவறான வாக்குறுதிகளை முதலீட்டாளர்களுக்கு அளித்து, பணப்பரிவர்த்தனையில் அதிக அளவில் மோசடி நடந்திருப்பதாகவும் அவர்கள் கூறினர்.

பலநூறு கோடி ரூபாய் சட்டவிரோதமாக, வெளிநாடுகளுக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பது தெரியவந்திருப்பதாகவும், சிங்கப்பூரில் உள்ள **Ashish Bhalla-**வின் குடும்பத்தினருக்கும் இதில் தொடர்பு உள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஹரியானா, உத்தரபிரதேசம், சண்டிகர், குஜராத், பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்களில் இதுதொடர்பாக மேலும் சோதனைகள் நடைபெற்று வருவதாகவும் அமலாக்கத்துறையினர் கூறினர்

**>>>>><<<<<**

ரயில் நிலையங்களில் கூட்ட நெரிசலை கட்டுப்படுத்துவதற்கான புதிய நடைமுறைகளை ரயில்வே அமைச்சகம் இன்று அறிவித்துள்ளது.

ரயில்வே அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ் தலைமையிலான உயர்மட்டக் குழுவின் ஆலோசனைக்குப் பிறகு, இந்த நடைமுறைகள் அறிவிக்கப்பட்டன.

அதிக அளவில் மக்கள் கூடும் 60 ரயில் நிலையங்களில் பயணிகள் ரயில் நிலையங்களுக்கு வெளியே, காத்திருப்பு அறைகளை அமைக்க வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

ரயில், நிலையத்திற்குள் வந்த பிறகே, இங்கு தங்கியிருப்போர் நடைமேடைக்கு செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

புதுதில்லி, ஆனந்த் விஹார், வாரணாசி, அயோத்தியா, பாட்னா ரயில் நிலையங்களில் முன்னோடித் திட்டமாக இதனை செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

முன்பதிவு உறுதி செய்யப்பட்ட பயணிகள் மட்டும் நேரடியாக நடைமேடைக்குச் செல்ல அனுமதிப்பது என்றும் இந்த ஆலோசனையின் உறுதி செய்யப்பட்டது.

காத்திருப்பு பயணச்சீட்டுகளை வைத்திருப்போர் ரயில் நிலையத்திற்கு வெளியே தங்கியிருக்க வேண்டும் என்றும், தேவையில்லாத இடங்களில் ரயில் நிலையத்திற்குள் நுழைந்து கூட்ட நெரிசல் ஏற்படுவதை தடுக்கவும் இக்கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

ரயில் நிலையங்களில் பயணிகள் எளிதாக கடந்து செல்ல வசதியாக, நகரும் பாலங்களை ஏற்படுத்தவும் ரயில்வே அமைச்சகம் முடிவு செய்துள்ளது.

**>>>>><<<<<**

இந்தியாவும் - அமெரிக்காவும் பல்துறை இருதரப்பு வர்த்தக ஒப்பந்தங்களை செயல்படுத்துவது குறித்து விரிவான அளவில் ஆலோசிக்கப்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால், பிரதமர் திரு. நரேந்திர மோடி கடந்த மாதம் மேற்கொண்ட அமெரிக்க பயணத்தின் போது இருநாடுகளுக்கும் பயன் தரத்தக்க பல்துறை இருதரப்பு வர்த்தக ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான திட்டங்கள் குறித்து அறிவிக்கப்பட்டதாகவும் கூறினார்.

மத்திய தொழில் வர்த்தகத்துறை அமைச்சர் திரு. பியூஷ் கோயலும், அமெரிக்க வர்த்தகத்துறை அமைச்சருடன் ஆக்கபூர்வமான பேச்சுக்களை நடத்தியுள்ளதாகவும் திரு. ரன்தீர் ஜெய்ஸ்வால் தெரிவித்தார்.

**>>>>><<<<<**

பிரதமரின் மக்கள் மருந்தகங்கள் சாமானிய மக்களின் மருந்து செலவை கணிசமாக குறைத்துள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இதனை தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - எல். முருகன் 47 செகண்ட்ஸ்)

**>>>>><<<<<**

கார்நாடகாவில் ஆட்சிப் பொறுப்பில் உள்ள காங்கிரஸ் அரசு, மாநில பட்ஜெட்டில் சிறுபான்மையினருக்கான அறிவிப்புகளை வெளியிட்டு, கண்துடைப்பு அரசியல் நடத்தி வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் இதனை தெரிவித்த பிஜேபி செய்தி தொடர்பாளர் திரு. அனில் ஆண்டனி, மாநில அரசு மேற்கொள்ளும் பொதுப்பணித்துறை ஒப்பந்தங்களில் நான்கு சதவீதத்தை, ஒரு குறிப்பிட்ட சமூகத்திற்கு மட்டுமே ஒதுக்கீடு செய்திருப்பதாக குறைகூறினார்.

இந்த நடவடிக்கை டாக்டர் அம்பேத்கர் அரசியல் சாசனத்தில் வகுத்துக் கொடுத்த இடஒதுக்கீட்டுக் கொள்கைக்கு எதிரானது என்றும் அவர் குறிப்பிட்டார்.

சிறுபான்மையினர் என்பது ஒரேயொரு சமூகத்தினர் மட்டுமா என்பதை காங்கிரஸ் கட்சி தெளிவுபடுத்த வேண்டும் என்றும் திரு. அனில் ஆண்டனி கேள்வி எழுப்பினார்.

**>>>>><<<<<**

**Prague** செஸ் போட்டியின் எட்டாவது சுற்று முடிவில் இந்தியாவின் அரவிந்த் சிதம்பரம் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளார்.

செக்குடியரசில் நடைபெற்று வரும் இப்போட்டியில் ஒரு சுற்று எஞ்சியுள்ள நிலையில் ஐந்தரை புள்ளிகளை அவர் பெற்றுள்ளார்.

**>>>>><<<<<**

ஆசிய மகளிர் கபடி சாம்பியன் போட்டியில் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஈரானின் டெஹ்ரானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் லீக் ஆட்டத்தில் இந்தியா இன்று 73-19 என்ற புள்ளிக்கணக்கில் மலேசியாவை வென்றது.

பங்கேற்ற 3 போட்டிகளிலும் வெற்றி பெற்றதன் மூலம் இந்தியா அரையிறுதிக்கு முன்னேறியது.

**>>>>>END<<<<<**